සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**85 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

ගෘහ ආර්ථික විද්‍යාව **I, II**
மனைப் பொருளியல் **I, II**
Home Economics **I, II**

## மனைப் பொருளியல் II

* **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு **10** புள்ளிகள் வீதமும் உரித்தாகும்.

**1.** பின்வரும் விடய ஆய்வை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.

வசதியான வீடொன்றில் வாழும் திரு. மூர்த்தி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மனைவி தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரிகின்றார். அவர்களது மூத்த பிள்ளையான தனுஷன் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கின்ற அதேவேளை மாணவர் தலைவனுமாவான். 6 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மகளான நிஷாந்தி வகுப்புத் தலைவியாவாள். அவர்கள் இருவரும் விளையாட்டுக்களில் திறமையானவர்கள். பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் தலைமை தாங்குவார்கள். அயல்வீடொன்றில் வசிக்கும் ஐந்து வயதான பெண் பிள்ளையொருவர் இவர்களது வீட்டில் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் தனது பொழுதைக் கழிப்பது வழக்கமாகும்.

(i) இக் குடும்பத்திற்கான உணவுப் பதார்த்தங்களைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய இரு விடயங்களை எழுதுக.

(ii) தாய் தொழில் புரியும் இடத்திற்குக் கொண்டு செல்லப் பொருத்தமான பகல் உணவு வேளை ஒன்றைக் குறிப்பிடுக.

(iii) தனுஷனின் போசணைத் தேவைகள் **இரண்டினை** எழுதுக.

(iv) நிஷாந்தியின் பிறந்தநாள் விழாவிற்கு திரவ மாக்குழையலைக் கொண்டு தயாரிக்கக்கூடிய உணவு வகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(v) இவ்வீட்டின் வரவேற்பறையின் cushion உறையொன்றிற்குப் பொருத்தமான கட்டுரு ஒன்றை வரைக.

(vi) ஐந்து வயதுடைய பெண்பிள்ளையின் ஆடைக்குப் பொருத்தமான தாவர நார் வகையொன்றில் தயாரிக்கும் **இரண்டு** துணி வகைகளைக் குறிப்பிடுக.

(vii) தனுஷனினதும் நிஷாந்தியினதும் சமூக வளர்ச்சியை வெளிப்படுத்தும் **இரண்டு** பண்புகளை எழுதுக.

(viii) ஐந்து வயதுப் பிள்ளைக்கு வழங்கப்படும் இருகூட்டு தடுப்பூசியின் மூலம் தடுக்கப்படும் நோய்களைக் குறிப்பிடுக.

(ix) அவர்களது காணியின் எல்லைகளுக்கு தடுப்புச் சுவருக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய வேறு **இரண்டு** முறைகளை எழுதுக.

(x) இங்கு சமயலறைக்கு வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளப் பயன்படுத்தக்கூடிய மேம்படுத்தப்பட்ட முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2.** (i) துணிகளில் காணப்படக்கூடிய தொழில்நுட்பக் குறைபாடுகள் **மூன்றினை** எழுதுக.

(ii) 'பெருநூலோடல்' எனும் தையல் முறையை விபரிக்குக.

(iii) 'தையல் முறைகள் மூலம் துணை அலங்காரப் பொருட்களைத் தயாரிக்க முடியும்'

(a) அவ்வாறான துணை அலங்காரப் பொருட்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(b) துணை அலங்காரப் பொருட்களில் இருக்க வேண்டிய **மூன்று** பண்புகளை விளக்குக.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

[பக். 6 ஐப் பார்க்க

**3.** (i) வயதுவந்த பருவத்தில் ஏற்படும் அயடின் குறைபாட்டின் நோய் அறிகுறிகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) கர்ப்பிணித் தாய் ஒருவருக்குப் பொருத்தமான பகல் உணவு வேளைக்கான உணவுப் பட்டியலைத் திட்டமிடுக. உங்கள் தெரிவுக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) காபோவைதரேற்றின் தொழிற்பாட்டினைக் குறிப்பிடுக.

**4.** (i) உணவு வகைகளைத் தயாரிக்கும்போது சேர்த்துக் கொள்ளப்படும் பொங்க வைக்கும் காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. அவை ஒவ்வொன்றையும் பயன்படுத்தித் தயாரிக்கும் உணவு வகைகள் **ஒவ்வொன்று** வீதம் குறிப்பிடுக.

(ii) உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் இரசாயனக் காரணங்கள் **மூன்றை** எழுதுக.

(iii) மாங்காய்ச் சட்னி தயாரிக்கும் செயன்முறையைப் படிமுறையாக முன்வைக்குக.

**5.** (i) 'சமையலறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு சிறந்த முகாமைத்துவம் முக்கியமானதாகும்.' இங்கு கவனம் செலுத்த வேண்டிய **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) வீடொன்றை அமைக்கும் போது,

- உட்கட்டமைப்பு வசதிகள்
- நிதி வசதிகள்
- இடவசதி

முக்கியமான காரணிகளாகும். இவை ஒவ்வொன்றையும் அறிமுகஞ் செய்க.

(iii) 'குடும்பத்திலிருந்து சமூகத்திற்கும்', 'சமூகத்திலிருந்து குடும்பத்திற்கும்' நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் **இரண்டு** வீதம் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றை** விளக்குக.

**6.** (i) 'மொரியுலா' என்பதனை அறிமுகஞ் செய்க.

(ii) கர்ப்பிணித் தாய்மாருக்கான பிணி ஆய்வின்போது மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கக் கூடிய **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) குறிப்பெழுதுக.

(a) மாதவிடாய் சக்கரம்

(b) கர்ப்பிணிப் பருவத்தில் இரும்புச்சத்தின் அவசியம்

**7.** (i) சிறு பிள்ளையொருவரின் மூக்கில் அல்லது தொண்டையில் ஏதேனும் சிக்குவதைத் தடுப்பதற்குப் பெற்றோர் எடுக்க வேண்டிய **மூன்று** படிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) ஆரம்ப ஆறு மாதங்களில் தாய்ப்பால் மட்டும் கொடுப்பதால் குழந்தைக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **மூன்றை** எழுதுக.

(iii) குழந்தைப் பருவத்தில் வெவ்வேறு வயதுகளில் வழங்கக் கூடிய விளையாட்டுப் பொருட்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

* * *